1974 மார்ச் 22] [திரு. வை. பாலசுந்தரம்]

முன் ஆண்டும்தான் தமிழ்நாட்டிலே ஒரு சில சமயங்களிலே காலரா நோய் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. அந்த நோயை அடியோடு கட்டுப்படுத்துவதற்குத் தனித் திட்டம் ஏதாவது கொண்டுவர அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, காலரா நோயைத் தடுப்பது என்பது நேரடியாக ஒரு தொத்துநோயைத் தடுக்கிற முயற்சியாக அமைவதல்ல. எல்லா மக்களுக்கும் பாது காக்கப்பட்ட குடிநீர் கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் மெல்ல மெல்லப் பூர்த்தியடைகின்ற கட்டத்திலே அதைத் தடுக்க முயல்வது எளிதாகும். காலரா தலை காட்டாமல் இருப்பதற்காக எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தலை காட்டிவிட்டால் அதைப் போக்குவதற்காக ஆயிரக்கணக்கான ஊசிகள் போடப்பட்டு அந்த வட்டாரம் பாதுகாக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று சங்கிலிபோன்று தொடர்புடையவை ஆகும்.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

* 557. **வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லித் துறை குடிநீர்த் திட்டம் இந்தாண்டு தொடங்க அரசாங்க பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த நெல்லித் துறைத் திட்டத்தின் மூலமாக—சிங்காநல்லூர் முனிசிபாலிடி, பல்லடம், சூலூர், சோமனூர் போன்ற இடங்களிலே தண்ணீர் கிடைக்காத காரணத்தினாலே—அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று பல வருடங்களாக வற்புறுத்தப்பட்டு அதை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் எதன் காரணமாக தாமதிக்கிறது, நிதியில்லையா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

[1974 மார்ச் 22

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சில திட்டங்கள் மிக விரிவாக, பரவலான பகுதிகளுக்குப் போடப் படுகிறபோது மிக நீண்டகாலம் ஆகும். குறிப்பிட்ட ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக அல்லது மூன்று ஆண்டுகளுக்குள்ளாக என்று திட்டம் போட்டால்தான் அது விரைவிலே மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடியதாக இருக்கும். மிக நீண்டகாலத் திட்ட மாக இருந்தால் கோவை நகர், சிங்காநல்லூர், பல்லடம் பேரூராட்சி, சோமனூர் பேரூராட்சி என்று தொடங்கி ஏறத்தாழ 13, 14 பகுதிகளை உள்ளடக்கி 14 கோடி ரூபாய் அளவிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகத் திட்டம் தயாரிக்கப்பட்டது, அது நிறைவேற்றப்படுகின்ற காலத்திலே 20, 22 கோடி ரூபாய் ஆகி விடும்.

அது மட்டுமல்ல, ஒரு ஆண்டிற்கு மெயின்டனன்ஸ் செய்வதற் காக 95 லட்சம் ரூபாய் ஆகும். அதுவும் வளரும்.

இதற்கிடையில் சிறுவாணித் திட்ட ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேறுகின்ற நிலைமை ஏற்பட்டு இருப்பதால் அதைக்கொண்டு அந்தக் குறைகளைப் போக்கமுடியும், அந்தக் குறிக்கோளிலேதான் அரசு செயல்படுகிறது, காரணம் அதனுடைய மெயின்டனன்ஸ் செலவு 10 அல்லது 11 லட்சம் ரூபாய்தான் ஆகும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இந்த மன்றத்திலே பொதுப் பணித்துறை அமைச்சர் பதிலளிக்கும்போது நெல்லித் துறைத் திட்டம் சென்ட்ரல் வாட்டர் போர்டால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் இப்பொழுது சொல்வது சிறுவாணித் திட்டம் வந்துவிடும், ஆகவே, பிரச்னை தீர்ந்துவிடும் என்றார்கள். அது சரியல்ல. அந்தத் திட்டத்தினால் வடக்கே இருக்கின்ற பகுதி களுக்குப் பலன் கிடைக்காது. அதற்கு அந்தத் திட்டம்தான் போடப்படவேண்டும். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சென்ட்ரல் வாட்டர்போர்டு சாங்ஷன் செய்துவிட்டது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே அந்தத் திட்டத் திற்கான சாமான்களை இறக்குமதி செய்ய முயற்சி செய்யப் போகிறார்களா? அந்த வேலையை இப்பொழுது தொடங்கி குறைந்தது 3 ஆண்டுக்காலதிற்குள்ளாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுகின்றவகையிலே தொடக்க வேலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

1974 மார்ச் 22]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்ட்ரல் வாட்டர் போர்டு அல்லது கமிஷன் சொல்லிய கருத்து, ஒரு ஆற்றினுடைய நீரை வேறு பகுதிக்குப் பயன்படுத்தும்போது வேறு சிலருடைய மறுப்பு அல்லது அவர்களுடைய இடையூறுகள் ஏற்படாமல் இருப்பதற்காகத்தான். ஒரு திட்டம் போடுகிறபோது அதனுடைய ஃபீஸிபிளிட்டி எந்த அளவிற்கு அது விரைவாக நிறைவேற்றப்படும் என்பதையெல்லாம் பொறுத்தது ஆகும். அந்த முறையிலே தமிழ்நாட்டிலே கோடிக் கணக்கான ரூபாய்களைப் பல்வேறு திட்டங்களில் செலவழிக்கின்ற வாய்ப்பும் இல்லை, அப்படியே நிதி கடன் கிடைக்கிற நிலைமை ஏற்பட்டாலும்கூட அதற்குத் தேவையான சாதனங்கள், தேவைப் படுகின்ற குழாய்கள் இவைகளையெல்லாம் உற்பத்திசெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் தமிழ் நாட்டிலே இல்லை.

அது மட்டுமல்ல, மூலப்பொருட்களும், பட்டறை வைத்து அதை இயக்கவேண்டுமென்றால்கூட அதற்கான மின்சாரம் கிடைப் பதிலேகூட தடங்கல் இருக்கின்ற நிலைமை, உற்பத்தி செய்கிற ஆற்றல், தேவையான சாதனங்கள் பொருள்கள் இல்லாமை, தேவையான மூலதனம் இவையெல்லாவற்றையும் குறிப்பிட்ட காலத்திலே நாம் திரட்டி நிறைவேற்றுவது என்பது முடியாத காரியம். ஆகவே, ஒவ்வொரு திட்டமாகச் சாத்தியக்கூறுகள் இருக்கின்ற அடிப்படையிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி 558.

திரு. ஏ. சுப்பிரமணியம்: சார். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அமைச்சர் அவர்களுடைய பதில் 'வேக்' ஆக, 'ஜெனரலாக' இருக்கிறது. ஆகவே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியம் வரும்பொழுது விவரமாகச் சொல்லுங்கள், இப்பொழுது என்ன கேட்டாலும் 'வேக்' ஆக, 'ஜெனரலாக' இருப்பதாகத்தான் தெரியும், வினா 558